RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1826

OPEN ACCESS

# தமிழ் அற இலக்கியங்கள் வலியுறுத்தும் பெண்களின் நாணம் மற்றும் கற்பின் குணங்கள் ஓர் ஆய்வு

**ந. கலைமகள் [அ, *], சு. இரவிச்சந்திரன் [அ]**

[அ] சர் ஏ.டி.பன்னீர்செல்வம் தமிழ்த்துறை உயராய்வு மையம், அரசர் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப் பெற்றது), திருவையாறு-613204 தமிழ்நாடு, இந்தியா.

# Moral Literature in Tamil on the Qualities of Coyness and Chastity of Women

**N. Kalaimagal [a, *], S. Ravichandran [a]**

[a] Sir A.T. Panneerselvam PG and Research Department of Tamil, Raja's College (Affiliated to Bharathidasan University), Thiruvaiyaru-613204, Tamil Nadu, India

* Corresponding Author: kalainataraj2015@gmail.com

Received: 12-08-2022
Revised: 30-10-2022
Accepted: 07-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

A woman from birth to death lives her life for the welfare of others instead of living for herself. For such a woman in the ancient times, many titles such as a woman filled with fear, modesty bordering on ignorance, and Coyness have been assigned to such a woman. The restrictions that she has to travel throughout her life through the titles laid down in such a way are pointed out in a gentle and patriarchal way. In ancient period, women are forced in various ways to live a slave lifestyle. Those who deviate slightly from these restrictions are reprimanded as deviant. Since ancient times, the human society had the lofty idea that human beings should led a virtuous life. Such status is considered as a tool to destroy women's ability to assimilate her knowledge. Chastity and coyness are common to the human race, but society insists that it belongs only to the female clan and being with chastity and coyness will bring pride to women. This article examines chastity and coyness which are the two qualities among four types of qualities in moral literature.

**Keywords:** Feminine, Characteristic, Character, Chord, Chastity, Virtue

## முன்னுரை

ஒரு மொழியின் சிறப்பிற்கு இலக்கியங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவ்விலக்கியங்கள், தோன்றும் காலத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் செயல்பாடுகள், நாகரிகம், பண்பாடு, வகைப்பாட்டு முறை, எழுச்சி, வீழ்ச்சி போன்றனதெளிவாகக் காட்டப்படுகின்றன அத்துடன் பெண்களுக்கான முக்கிய பங்கும் தெளிவுறுத்தப்படுகின்றது. ஏனெனில், ஒரு சமுதாயம் உயர்வதும், தாழ்வதும் அச்சமுதாயத்தில் வாழும் பெண்களின் நிலையைப் பொறுத்தே அமையும். பெண்மையின்றி இவ்வுலகம் இல்லை என்றும் கூறலாம். அத்தகு மாட்சிமைக்குரிய பெண்களின் பண்புகளாக நாணம், கற்பு பற்றித் தமிழ்ச் செவ்வியல் அற இலக்கியங்கள் வலியுறுத்தும் கூறுகளில் பெண்களின் நிலை பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண் - விளக்கம்

நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி 'பெண்' என்னும் சொல்லுக்குக் கற்றாழை, ஸ்த்ரீ, மனைவி, விலங்கின் பொது என விளக்கம் தருகிறது. பெண் என்னுஞ்சொல் கடைகுறைந்து, பெண்ணென நின்று, பின்னைப் பெண்ணெனும் ஓர் இனத்தைக் குறிப்பதாயிற்று (Kalyanasundaranar, 1973). பெண்மையிலிருந்து பெண் தோன்றியது என்பதை இதன்வழி அறியமுடிகிறது.

## பெண்மை

பெண்மை என்பதற்கு பெண் தன்மை, மாட்சிமை எனப் பொருள் தருகிறது (Kathiraiverpillai, 2011). அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும் (Kalyanasundaranar, 1973).

## அறிஞர்கள் பார்வையில் பெண்

பெண்ணின் உடல்ரீதியிலான வேறுபாடுகளால் பெண் தாழ்ந்தவளாகக் காட்டப்படுகிறாள் (Heys, 1964). பெண் எல்லா இடங்களிலும் அனைத்துச் சமூகத்தினராலும் ஒடுக்கப்பட்டாள் தான் என்று குறிப்பிடுகிறார் (Aranga Mallika, 2002). ஒரு சமுதாயத்தில் ஆடவர் எத்துணை சிறந்தவர் ஆயினும், அச்சமுதாயம் ஆவதும், அழிவதும் அதிலுள்ள பெண்களால்தான் என்பது வரலாறு கண்ட உண்மை என ஞானசம்பந்தன் கூறுகிறார் (Gnanasambandan, 2003).

## பெண்ணின் சிறப்பு

மனித வாழ்க்கை உறவுகளால் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. உறவு இல்லா வாழ்க்கையானது பட்ட மரம் போன்று காணப்படும். எனவே எல்லா உறவுகளும் சிறப்புப் பெறுவதாகவே எண்ணப்படுகிறது. எனினும் தாய் என்னும் உறவு தனிச்சிறப்பு பெற்றது என்பதை நான்மணிக்கடிகை (84:4) அழகாகத் தெளிவுறுத்துகிறது. தாயைக் கடவுளாகக் கூறும் முதல் நூல் நான்மணிக்கடிகை ஆகலாம் என்கிறார் (Aravanan, 2003).

தாய்த்தெய்வம் மிகப் பழமையான தெய்வம் என்பதால்தான் "பழையோள்" என்று பண்டைய இலக்கியங்களில் குறிக்கப்பெற்றாள். மணிமேகலையில் இவள் இருக்குமிடம் "முதியோள் கோட்டம்" என்று குறிக்கப்பட்டது காணப்படுகிறது (Aravanan, 2003).

சாத்தனார் தம் சிறைசெய்காதையில்.

"நெடுநிலைக் கந்தில் நின்ற பாவையொடு

முதியோள் கோட்டம், வழிபடல் புரிந்தோர்"

என்று தம் காப்பியத்தில் கூறுவதன் மூலம் 'முதியோள் கோட்டம்' என்னும் இடத்தில் 'சம்பாபதி' எனும் தாய்த்தெய்வம் இருந்தது என்றும், உதயணகுமாரனிடம் இருந்து மணிமேகலையை மீட்டது அத்தெய்வம் என்பதுவும் தெளிவாகிறது (Puliyur Kesigan, 2015).

அன்று பெண் என்பவள் தாய்த் தெய்வம், தெய்வத்தாய் என்று முதியோள் கோட்டத்தில் வைத்து தெய்வமாக மதிக்கப்பட்டாள். இன்று முதியோர் இல்லத்தில் வைத்து மிதிக்கப்படுகிறாள். இஃது காலமாற்றத்திற்குள்ளான சமுதாயத்தில் நடந்து கொண்டிருக்கும் மனவேறுபாட்டினை அறியச்செய்கிறது.

அற இலக்கியங்கள் மக்கள் வாழ்வுக்கான நெறிமுறைகளை எடுத்துரைக்கின்றன. அம்மக்கள் வாழ்க்கை செழுமையாக்கப்படுவது பெண்ணினால் மட்டுமே முழுமையாகச் சாத்தியமாகும். இதனை மனத்தில் கொண்ட புலவர் பெருமக்கள் தகுந்த இடங்களில் பெண்ணை முன்னிறுத்திக் கூறுகின்றனர்.

நாலடியார் 9 பாடல்களும், பழமொழி நானூறு 52 பாடல்களும், ஏலாதி 4 பாடல்களும் மகடூஉ முன்னிலையாகக் காணப்படுகின்றன.

## அற இலக்கியங்களில் பெண்ணின் பண்பு

உலக ஒழுக்கம் அறிந்து நடத்தலே பண்பு என்பதை கூறுகிறது (Swaminatha Iyer, 2009). 'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல் (Visuvanathan, 2004). உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகும் பண்புடையவர்கள் இருப்பதனால்தான் உலகம் இயங்குகின்றது. அவர்கள் இல்லையெனில், உலகம் மண்ணுக்குள் மறைந்து அழிந்து விடும் எனத் தெய்வப்புலவர் மக்கள் ஒழுக வேண்டிய பண்பினை வலியுறுத்தியிருக்கிறார் (Thiruvalluvar, 2015).

பண்பு என்பதற்கு கழகத் தமிழ் அகராதி குணம், தகுதி, விதம், இயல்பு, மனத்தன்மை, அழகு, முறை, செய்கை, பண்புப்பெயர் என்றும் நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி குணம், தகுதி, விதம் என்றும் பொருள் கூறுகிறது. பண்பு எனினும் இலக்கணம் எனினும் இயல்பு எனினும் ஒக்கும் (Dhamothiran, 2013).

'குணம்' என்ற சொல்லுக்குக் கழகத் தமிழ் அகராதி 57 வகையானப் பொருள்களைத் தருகிறது. அவை, இயல், இயல்பு, உரிமை, உழுவல், கிழமை, கொள்கை, கோள், சால்பு, சீலம், தகவு, தகுதி, தகை, தகைமை, திறன், நிலை, நிறம், நீர், நீர்மை, நுனித்தல், படி, பண்பு, பரிசு, பாடு, பால், பான்மை, மரபு, பிரகிருதி, பெற்றிமாலை, முறை, வண்ணம், விதி, இலட்சணம், கயிறு, சூடம், சத்து, சுகம், சீர்மை, தத்துவம், தன்மை, நாணி, மேன்மை, பொருளின் தன்மை, ஒழுக்கத்தன்மை, நூலைச் சிறப்பிக்கும் செறிவு, தெளிவு முதலிய தன்மை அறிவுத் தெளிவு நூல் வில்லின் நாண், நிறை, ஒர்ப்பு, கடைப்பிடி, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகியனவாகும்.

தமிழ்மொழியின் தொன்மை நூலான தொல்காப்பியம், பெண்ணின் இயல்பு பற்றிக் கூறும்போது அச்சம், மடம், நாணம் பெண்களுக்கே உரியது என வரையறை செய்துள்ளது.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்குரிய என்ப"

என்றுரைக்கின்றது (Ilampuranar, 1966). மகடூஉக் குணம் (4), அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு (Singaravelu Mudaliar, 2020).

கல்வி, செல்வம், வீரம் முதலியன மனிதனிடம் இருக்க வேண்டியவை ஆகும். நாணமுடைய மனைவியானவள் இம்மூன்று பொருட்களுக்கும் சமமானவள் என்று நாலடியார் (386) நாணமுடைய பெண்ணின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறது.

பெரும்பாலும், பெண் ஆபரணம் பூட்டித் தன்னை ஒப்பனை செய்து கொள்வதில் ஈடுபாட்டுடன் இருப்பவள். அத்தகைய பெண் அணிகலன் எதுவும் அணியவில்லையெனினும், நாணமே சிறந்த அணிகலன் என்று நான்மணிக்கடிகை (9) இயம்புகின்றது. பெண்ணின் பண்புகள் பற்றிக் குறிப்பிடும் சிறுபஞ்சமூலம் (43:2) பெண் நாணம் கொண்டிருத்தல் சிறப்பு என்று உரைக்கின்றது.

"நாணம் இருவகைப்படும். காமநாணம், ஒழுக்க நாணம். நாணம் மனித இனத்திற்குப் பொதுவானது. சமுதாய நலத்துக்கு உறுதுணையாவது. ஆணாயினும் பெண்ணாயினும் அன்னவர் பண்பினை மிகுவிப்பது. இஃது ஒழுக்க நாணம் எனப்படும். மற்றொரு வகையாகிய காம நாணம் பெண்மையோடு பிறந்தது பெண் பாலாராகிய மெல்லியலார்க்கு உரியது ஆடவர்தம் காம எழுச்சிக்குத் தூபமாவது இதனை நாணம் என்ற வழக்கில் கூறுகின்றோம். இந்நாணமில் நங்கை இன்பத்துக்குப் பகையாவாள் ஊடலுக்கு ஊற்றாகாள். நாண்மிகுதி பெண்மையை மிகுத்து முதலில் இன்பத்தை கனிவிக்கும்" என்று அறிவுரை காணப்படுகிறது (Manickam, 2005).

நாண் போல் வளைந்து போதலே நாணமாகும். இந்நாணத்தை இருவகையாகக் கொள்ளலாம். 1. அழகியல் சார்ந்தது, 2. துன்பியல் சார்ந்தது. முதலாவது நாணம் பெண்ணிற்குரியதாகவே கொள்ளலாம்.

தலைவியானவள் தலைவனை நேரிடையாகக் கண்டு நாணிக் குனிவது. இது காதலினால் ஏற்படும். இதற்குத் தகுந்த சான்றாக குறள் (1094) அமையும். இரண்டாவது நாணம், மானிடருக்குப் பொதுவானது. செய்த தவறுக்காக வருத்தப்பட்டு நாணிக் குனிவது. இது மானத்தினால் வருவதாகும்.

நாணமானது உயிரினும் சிறந்தது என்று தொல்காப்பியம் கூறுகிறது (Ilampuranar, 1966). இக்கருத்தினையே,

"நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்

நாண்துறவார் நாணாள் பவர்"

என்று வள்ளுவரும் வலியுறுத்தியுள்ளார்.

"அறத்தைப் பற்றியே மானிட வாழ்வு நடைபெற வேண்டும் என்ற உறுதி கொண்டவன் கவிஞன். மனிதனின் நிற, இன வேற்றுமைகள் எவ்வாறு இருப்பினும், அறம் மானிட சாதி முழுவதுக்கும் பொது என்பதை நம்பினவன் கவிஞன்" என்று கூறுகிறார் (Gnanasambandan, 2003).

ஒரு செயலை 'இவ்வாறு செய்யலாம்' என்று சொல்வது யாருக்கும் எளிதானது. சொல்லியபடி செய்து முடிப்பது அரிதானது என்பது வள்ளுவர் வாக்கு (குறள்.664). அவ்வகையில் நாடும் வீடும் நன்மைபெற பல அறத்தினை சங்கம் மருவிய கால புலவர்கள் கூறியிருக்கின்றனர். அதனை அப்புலவர்கள் மற்றும் அவ்வின ஆண்மக்கள் எம்முறையில் பின்பற்றினார்கள் என்பது அறிய இயலாததாகும். ஆனால் "ஆண்கள் அறம் பற்றிக் கூறுவனவற்றை வீட்டிலிருந்து கடைப்பிடிப்பவர்கள் பெண்களேயாவர்" என்று கூறுகிறார் (Gnanasambandan, 2003).

வ.சுப.மாணிக்கம், அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லாயினும், ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற்பண்பான கற்பையே குறிக்கும் (2009:68) என்று அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி கற்பு என்பது கல்வி, கற்பனை, நீதிநெறி, மகளிர் நிறை, மதிலுண்மேடை, மதில், முல்லைக்கொடி, முறைமை, விதி எனப் பல பொருள்களைத் தருகிறது. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் கற்பு என்பதற்கு இல்லற ஒழுக்கம், கல்வி, பயிற்சி எனப் பொருள் தருகிறது (Sarangabani, 2013). கல் என்ற வேர்ச்சொல்லினின்றும் பிறந்தவை 'கற்பு', 'கல்வி' போன்ற சொற்கள். கல்வியினால் உண்டாகும் ஞானமும் கற்புதான்.

எழுதாக் கற்பின் நின் சொலுள்ளும் (Swaminatha Iyer, 2009).

ஆழி ஏந்திய கையனை அந்தணர் கற்பினை

"பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்

தெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே"

பிறர் அறியாதபடி களவின்கண் பழகி தலைவனும் தலைவியும் ஊரார் அறியத் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவது கற்பாகும் (Thirugnanasambandam, 2010). களவு வெளிப்பட்டுத் திருமணத்தில் முடிவதைத் தொல்காப்பியர்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"

என்பது நிறைந்த ஒழுக்கம் என்கிறார் (Ilampuranar, 1966).

இளம்பூரணர், "கற்பென்று சொல்லப்படுவது, கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினையுடையார் கொடுப்பக் கொள்வது என்றவாறு" என்று கூறுகிறார் (Ilampuranar, 1966).

மணத்திற்குப் பின் நிகழ்வது கற்பு எனப்படும் கற்பு வாழ்வு கடமை வாழ்வு மேலோங்கி நிற்கும் என்று பண்டைத் தமிழரின் உயர்ந்த பண்பினைச் சுட்டிக் காட்டுகிறார் (Aravanan, 2003).

காட்டலாகப் பொருள் பற்றிக் கூறும் தொல்காப்பியம் பொருளியல் கற்பினையும் உள்ளடக்குகிறது. கற்பு என்பது மகளிர்க்கு மாந்தர் மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி. அதுவும் மனத்தான் உணரக் கிடந்தது என உரையாசிரியர் விளக்கம் கூறுகிறார் (Ilampuranar, 1966).

கற்பு என்பது பொலிவினைத் தருகின்ற சிறப்பினை உடையது என்பதை நம்பியகப்பொருள் காட்டுகிறது. "பொற்பமை சிறப்பின் கற்புஎனப் படுவது" என்பதாகும்.

களவு பிறர்க்குரித்தென்று இரு முதுகுரவராற் கொடை யெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது இருவருங் கரந்த வுள்ளத் தோடேதிர்ப்பட்டுப் புணர்வது. இது, பிறர்க்குரிய பொருளை மறையிற்கொள்ளும் களவன்று. இது, வேதத்தை மறையென்பது போல்வது (Singaravelu Mudaliar, 2020).

களவு வாழ்க்கையானது, நான்கு வேதத்துடன் கூறப்படும் எண்வகை மணங்களுள் யாழோர் கூட்டமாகிய காந்தர்வ மணத்தை ஒத்ததாகும் என்று களவின் இயல்பினை நம்பி அகப்பொருள் கூறுகிறது (Thirugnanasambandam, 2010).

களவை முழுவதும் மறைத்தோ அல்லது சிறிதளவேனும் வெளிப்படுத்தியோ பெற்றோரின் விருப்பத்தினையும் வாழ்த்தினையும் எவ்வாறேனும் பெற்று மரபுப்படி திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் பேரவா அக்காலத்தில் இருந்தது. இதனை குறுந்தொகைப் பாடல் தெளிவுறுத்துகின்றது (Swaminatha Iyer, 2009).

கற்பு என்பது வலிமையானது என்பதனை வழி அறியலாம் (Thiruvalluvar, 2015). இக்கற்பு நெறி ஆண், பெண் இருவருக்கும் பொதுவாக இருக்க வேண்டிய பண்பாகும் எனப் பாரதியார் பின்வருமாறு காட்டுகிறார்.

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

அற இலக்கியங்கள் இல்லறப் பெண்ணுக்குரிய ஒழுக்கநெறியாகவே கற்பைக் கூறுகின்றன. பெருமை இல்லாத மனிதரைவிடக் கற்புப் பிறழாத பெண்மை மிக நல்லது என்று நான்மணிக்கடிகை (13) வலியுறுத்துவது இவண் எண்ணத்தக்கது (Thiruvalluvar, 2015). மனிதனானவன் பெருமையின்றி இருப்பினும், அவனுடைய வாழ்க்கைத் துணைவி கற்புடன் இருப்பாளாயின் அதுவே அவனுக்குப் பல பெருமைகளை உண்டாக்கும் என்பதை மோகன் (திருமுரு.6), "மறுவில் கற்பினையும் வாள்நுதலையும் உடையவளின் கணவன் முருகன்" என்றும், ஆலிஸ் (பதிற்.70:14-16) "செல்வக் கடுங்கோ வாழியாதான் அமைதி மிக்குப் பெரிய மடம் என்னும் குணம் நிலைபெற்றவளும் கற்பனைத் தாங்கியவளும் மணங்கமழும் சுடர் நெற்றியை யுடையவளுமான உயர்ந்தவளின் கணவன்" என்றும், கு.வெ.பாலசுப்பிரமணியன், (புறம்.3:6) "பாண்டியன் கருங்கை ஒள்வாட்பெரும்பெயர் வழுதியை இரும்பிடர்த்தலையார் பாடும்போது, குற்றமற்ற கற்பினையுடைய, சேயிழையின் தலைவனே!" என்றும் இலக்கியங்கள் காட்டும் கூற்றுக்கள்வழி அறியச் செய்கின்றன.

கற்புடைய பெண் அமிர்தம் போன்றவள் என சிறுபஞ்சமூலம் (2) கூறுகின்றது. அமிர்தம் - அமுதம், அமிழ்தம் அனைத்தும் ஒத்த பொருள் உடையன. இஃது மரணமின்மை, தேவருணவு, நீர், உணவு, பசுவின் பால், இனிமை, வீடுபேறு என்னும் பொருள் உடையன எனப் புதிய தமிழ் அகராதி விளக்குகிறது.

மனைவியின் கடமை பற்றி கூறும் போது, "கற்புடையாள் பூண்ட கடன்" என்று கூறுகிறது (64). இல்லற நெறியில் தவறாது இருக்கும் பெண்களுக்குத் தகுந்த கடமைகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை சுற்றந்தழாலும் விருந்தோம்பலும் ஆகும். இக்கடமைகளைத் தவறாது நிறைவேற்ற வேண்டும்.

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பெற்று வந்த பொருளைத் தம் மனைவியிடம் தந்து, 'பல குணங்களும் மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய நின் உறவினர் மூத்த மகளிர்க்கும் கொடுப்பாயாக' என உரையாசிரியர் விளக்கம் தருகிறார் (Balasubramanian, 2004).

கற்புடைய பெண் இந்திராணி போன்றவள் என்று நாலடியார் கூறுகிறது. 1. இந்திராணி என்பவள் பாற்கடலில் பிறந்து இந்திரனை மணந்தவள். 2. பாண்டவராகப் பிறக்கும் இந்திரன் பொருட்டு துருபதன் யாகத்தில் திரௌபதியாகப் பிறந்தவள். 3. இவள் சத்தமாதர்களில் ஒருத்தி. இவளைத் துவஷ்டாவின் மகள் என்பர். இந்திரனுக்கொப்பாக வச்சிரம், சூலம், கதை முதலியவைகளைத் தரித்து யானை வாகனம் ஏறியிருக்குஞ் சக்தி என்று இந்திராணிக்குப் பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன (Singaravelu Mudaliar, 2020). இத்தகைய சிறப்பிற்குரிய இந்திராணியை கற்புடைய பெண்ணிற்கு எடுத்துக்காட்டி, கற்பின் தன்மை வலிமை மிகுந்தது உறுதிப்பாடுடையது என்பதைத் தெளியச்செய்கிறது.

கற்பு எனினும் நிறை எனினும் ஒத்த பொருள் உடையன. திருக்குறள் இதனை உறுதிப்படுத்துகிறது (Thiruvalluvar, 2015). "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" என்பது ஔவைச் சொல் (Avvaiyar, 2010). அற இலக்கியங்கள் பெண்களுக்குரிய பண்புகளாக அடங்கியிருத்தல், கணவனைத் தொழுதல், இல்லறத்தைப் பேணல், அச்சம், மடம், நாணம் போன்ற பண்புகளைக் கொண்டிருத்தல் போன்ற பொருள்களை மென்மேலும் விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இதற்கு விளக்கம் தரும், "மகளிர்க்கு கற்பு என்று சொல்லப்படுவது கணவர் வார்த்தைக்கு மாறுபட்டு நடவாமையாம்" என்று கூறியிருப்பதற்குச் சற்று மாறுபட்ட கோணத்தில் நோக்கும் தாயம்மாள் அறவாணன், "கணவனுக்குக் கொடுத்த வார்த்தையிலிருந்து, உறுதியிலிருந்து மாறாமல் நடப்பதே திருமணம் முடித்த ஒரு பெண்ணுக்குரிய கற்பாகக் கருதப்படுகிறது" என்று கூறியிருப்பதில், கூற்று இல்லறப்பெண் அடங்கியிருந்து நடக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதாக உணரச்செய்கிறது (Avvaiyar, 2010).

## முடிவுரை

காலந்தோறும், அற இலக்கியங்களில் பெண்ணின் கற்பு நிலைக்கு நால்வகை குணங்களை மட்டுமே வலியுறுத்தியே வந்துள்ளனர். இந்நால்வகைக் குணங்களும் பெண் மக்களுக்கு மட்டுமே உரியதன்று மானிடராய் பிறந்த அனைவருக்கும் உரியது. எனவே ஆடவருக்கும், அச்சம், மடம், நாணம் உரியது. இவை ஏற்படும் காலச்சூழல் இரு பாலினருக்கும் வேறுபடலாம்.

## References


Alis, A. (2007) Pathitrupathu, New Century Book House, Chennai, India.

Aranga Mallika, (2002) Tamil Ilakkiyamum Penniyamum, New Century Book House, Chennai, India.

Aravanan, K.P. (2003) Tamilarmel nigalantha panpattu padaiyeduppu, Tamil kottam, Chennai, India.

Avvaiyar, (2010) Needhi Noolkal, Paari Publications, Chennai, India.

Balasubramanian, K.V. (2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Dhamothiran, A. (2013) Iraiyanaar Kalaviyal, Senmozhi Tamil aaivu niruvanam, Chennai, India.

Gnanasambandan, A.S. (2003) Kamban Puthiya Paarvai, Gangai Puthaka Nilayam, Chennai, India.

Heys, H.R. (1964), "The Dangerous Sex, The Myth of Feminine Evil", Quoted in Kate Millett, Sexual Politics, New York.

Ilampuranar, (1966) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Kalyanasundaranar, T.V. (1973) Pennin Perumai allathu vazhkaithunai, Punitha Nilayam, Chennai, India.

Kathiraiverpillai, N. (2011) Tamil Mozhi Agrathi, Gowra Pathippagam, Chennai, India.

Manickam, V.S. (2005) Tamil Kadhal, Meiyappan Pathippagam, Chidambaram, India.

Mohan, R. (2004) Pathupattu, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

Puliyur Kesigan, (2015) Silapathikaram, Saradha Pathippagam, Chennai, India.

Sarangabani, R. (2013) Sanga Ilakkiyam Porukalanjiyam, Chennai, India.

Singaravelu Mudaliar, A. (2020) Abithana Chintamani, The Asian Publications, Chennai, India.

Swaminatha Iyer, U.V. (2009) Kurunthogai moolamum uraiyum, U. V. SA. Library, Chennai, India.

Thayammal Aravanaan, (2017) Avvaiyar Padaipuk Kalanjiyam, Tamil Kottam, Chennai, India.

Thirugnanasambandam, S. (2010) Naarkavirasa Nambi Iyatriya Akapporul Vilakkam, Kathir Pathipagam, Chennai, India.

Thiruvalluvar, (2015) Thirukkural, Manivasagar Pathipagam, Chennai, India.

Veeramamunivar, (2005) Sadhuragarathi, Sandhiya Pathippagam, Chennai, India.

Visuvanathan, A. (2004) Kalithogai (Mulamun Uraium), New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License